செ.வெ.எண்-17 நாள்-07.09.2018

# அரியலூர் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைத்தீர்க்கும் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் அரியலூர் மாவட்டத்தை சார்ந்த **மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம்** மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (07.09.2018) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது :-**

தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளுக்கென பல்வேறு நலத்திட்ட உதவிகளை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது. இதன் தொடர்ச்சியாக அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் பங்கேற்புடன் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைத்தீர்க்கும் விதமாக இக்கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கூட்டத்தில், **66** கோரிக்கை மனுக்களை மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பெறப்பட்டு, அம்மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மாற்றுத்திறனாளிகள் எளிதாக அறிந்துகொள்ளும் வகையில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து, துண்டு பிரசுரங்கள் அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், மாற்றுத்திறனாளிகள் அனைவரும் மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை பெற்று, தமிழக அரசின் அனைத்து நலத்திட்டங்களை பெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப.,** அவர்கள் பேசினார்கள்.

இக்கூட்டத்தில், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத்திட்டம்) பூங்கோதை, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் (பொ) காமாட்சி மற்றும் மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**